சட்டப்பேரவை பொதுத்தேர்தல் – 2026

தமிழ்நாடு – புதுச்சேரி சட்டப்பேரவை பொதுத் தேர்தலில் கழக வேட்பாளராகப் போட்டியிட விரும்புவோர் விண்ணப்பம் தருவதற்கான தேதி விவரம்.

பொதுச்செயலாளர் துரைமுருகன் அறிவிப்பு.

நடைபெறவிருக்கும் தமிழ்நாடு – புதுச்சேரி மாநில சட்டப் பேரவை பொதுத்தேர்தலுக்கு கழகத்தின் சார்பில் வேட்பாளராக போட்டியிட விரும்புவோர் **20–2–2026 வெள்ளிக்கிழமை முதல் 2–3–2026 திங்கட்கிழமை வரை** தலைமைக் கழகத்தில் விண்ணப்பித்திட வேண்டுகிறேன்.

தமிழ்நாடு – புதுச்சேரி மாநில சட்டப்பேரவை தொகுதிக்கான விண்ணப்பக் கட்டணம் :

பொதுத் தொகுதி	ரூ. 25,000/–
மகளிர்க்கும் மற்றும் தனித் தொகுதிக்கும்	ரூ. 15,000/–

குறிப்பு : வேட்பாளராக போட்டியிட விண்ணப்பித்தவர்கள் கூட்டணியின் தோழமைக் கட்சிகளுக்கென பகிர்ந்து கொள்ளப்பட்ட தொகுதிகளில் போட்டியிட விண்ணப்பித்திருப்பின் அவர்களது விண்ணப்பக் கட்டணம் பின்னர் திருப்பித் தரப்படும்.

விண்ணப்பபடிவம் தலைமைக் கழகத்தில் ரூ..1,000/– வீதம் செலுத்தி பெற்றுக் கொள்ளலாம்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை – 18.
நாள் : 18–02–2026.

துரைமுருகன்,
பொதுச்செயலாளர்,
தி.மு.க.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (18.2.2026) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத்தின் சார்பில், நீதிக்கட்சி வரலாறு, தந்தை பெரியார் சிந்தனைத் தொகுப்பு, அறிஞர் அண்ணா சிந்தனைத் தொகுப்பு, திராவிட இயக்க பெண் சிந்தனையாளர்கள் தொகுப்பு, திராவிட இயக்கமும் சமூக பண்பாட்டு பொருளாதார மாற்றங்களும், திராவிட இயக்கச் சிறுகதைகள்2 தொகுப்புகள் ஆகிய திராவிடக் களஞ்சியத்தின் 7 புத்தகங்களை வெளியிட்டார். இந்நிகழ்ச்சியில், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன், பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் முனைவர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத்தின் தலைவர் திண்டுக்கல் ஐ. லியோனி, பள்ளிக்கல்வித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் பி.சந்திரமோகன், தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத்தின் மேலாண்மை இயக்குநர் மரு. மா. ஆர்த்தி, திராவிடக் களஞ்சியத்தின் பொது பதிப்பாசிரியர் மூ.அப்பணசாமி மற்றும் நூல்களின் பதிப்பாசிரியர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத்தின் சார்பில்

திராவிடக் களஞ்சியத்தின் 7 புத்தகங்கள்!

முதல்வர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டார்!

சென்னை, பிப். 20 –

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (18.2.2026) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத்தின் சார்பில், நீதிக்கட்சி வரலாறு, தந்தை பெரியார் சிந்தனைத் தொகுப்பு, அறிஞர் அண்ணா சிந்தனைத் தொகுப்பு, திராவிட இயக்க பெண் சிந்தனையாளர்கள் தொகுப்பு, திராவிட இயக்கமும் சமூக பண்பாட்டு பொருளாதார மாற்றங்களும், திராவிட இயக்கச் சிறுகதைகள்-2 தொகுப்புகள் ஆகிய திராவிடக் களஞ்சியத்தின் 7 புத்தகங்களை வெளியிட்டார்.

திராவிடக் களஞ்சியம் திட்ட விளக்கம்

'திராவிடம்' என்ற சொல் கடந்த இரு நூற்றாண்டு காலமாக மானிடவியல், மொழியியல், வரலாறு, பண்பாட்டு ஆய்வு ஆகிய களங்களில் தெற்காசியாவில் வாழும் ஒரு மக்கள் இனம், மொழிக் குடும்பம், பண்பாட்டுக் குழுமத்தைச் சுட்டிக் காட்டவும், இக்காலத் தமிழ்நாட்டு மக்களிடையே வளர்ச்சி அடைந்து செல்வாக்குச் செலுத்தும் சமுதாய விடுதலை இயக்கத்தின் கருத்துநிலையைச் சுட்டிக்காட்டுகிறது.

அறிவுத் துறையில், களஞ்சியம் என்ற சொல் ஒரு பொருள் அல்லது பல பொருள் குறித்து பல அறிஞர்களின் எழுத்துகளைத் தொகுப்பாகக் கொண்டிருக்கும் நோக்கு நூல் படைப்பு (A REFERENCE WORK OR COMPENDIUM PROVIDING SUMMARIES OF KNOWLEDGE EITHER GENERAL OR SPECIAL TO A PARTICULAR FIELD OR DISCIPLINE) எனப் பொருள் கூறப்படுகின்றது. 'திராவிடக் களஞ்சியம்' என்பது, திராவிடச் சிந்தனை பற்றிய அறிவுக் களஞ்சியத் தொகுப்பு, திராவிட இயக்க ஆக்கங்களின் தொகுப்பு, திராவிடம் பற்றிய ஆய்வுகளின் தொகுப்பும் ஆகும்.

அண்மைக்கால அகழ்வாய்வு முடிவுகள் திராவிடப் பண்பாட்டின் தொன்மை தொடர்ச்சி குறித்து அறிவியல் பூர்வமான முடிவுகளை வழங்கி வரும் நிலையில் திராவிடக் களஞ்சியத் தொகுப்புகள் வெளிவருவது வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தது ஆகும். திராவிடப் பண்பாட்டின் தொன்மை என்பது தமிழ் மொழி வரலாற்றின் தொன்மையுமாகும். இந்த நெடும் வரலாற்றில் பண்பாட்டுப் படையெடுப்புகளையும் எதிர்கொண்டே வந்திருக்கிறது. இதன் தொடர்பில் உருவானதே திராவிட இயக்கம் ஆகும்.

திராவிட இயக்க வளர்ச்சி என்பது நமது முன்னேற்றத்தின் ஒரு அங்கமாகும். இத்தகைய நெடிய திராவிட பண்பாட்டின் வளர்ச்சி குறித்தும் திராவிட இயக்கம் குறித்தும், அனைத்து கருத்துகளையும் மாற்றங்களையும் களஞ்சியமாகத் தொகுத்து ஆவணப்படுத்துவதே திராவிடக் களஞ்சியம் திட்டத்தின் நோக்கமாகும்.

இத்திராவிடக் களஞ்சியம் பொதுமக்கள் அறிவுத் தேவையின் பொருட்டுத் தயாரிக்கப்பட வேண்டியுள்ளது. திராவிட இயக்கத்தின் கருத்தியல்கள், படைப்பு வளம் குறித்த ஆய்வுகளில் வல்லமை பெற்ற வல்லுநர்கள் குழுவைக் கொண்டு இந்த பணி கடந்த மூன்றாண்டு களாக நடந்து வருகிறது.

திராவிடக் களஞ்சியத்தின் 7 புத்தகங்களின் தொகுப்புகளை வெளியிடுதல்

அந்த வகையில், 13 திரட்டுகளாகத் திட்டமிட்டுள்ள இப்பணியில் முதற்கட்டமாக, நூலாசிரியர் க.திருநாவுக்கரசு அவர்களின் நீதிக்கட்சி வரலாறு, பதிப்பாசிரியர்கள் - புனிதப் பாண்டியன் அவர்களின் தந்தை பெரியார் சிந்தனைத் தொகுப்பு, வீ.எம்.எஸ்.சுபகுண ராஜன் அவர்களின் அறிஞர் அண்ணா சிந்தனைத் தொகுப்பு, முனைவர் எஸ். ஆனந்தி அவர்களின் திராவிட இயக்க பெண் சிந்தனையாளர்கள் தொகுப்பு, பேரா.சுப.வீரபாண்டியன் அவர்களின் திராவிட இயக்கமும் சமூக பண்பாட்டு பொருளாதார மாற்றங்களும், பேரா.ந. இளங்கோ அவர்களின் திராவிட இயக்கச் சிறுகதைகள், பேரா. ஹாஜாகனி அவர்களின் திராவிட இயக்கக் கவிதைகள் ஆகிய 7 தொகுப்புகளை தமிழ்நாடு முதலமைசர் அவர்கள் நேற்று முன்தினம் வெளியிட்டார்.

இந்நிகழ்ச்சியில், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் முனைவர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத்தின் தலைவர் திண்டுக்கல் ஐ.லியோனி, பள்ளிக்கல்வித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் பி. சந்திரமோகன், தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத்தின் மேலாண்மை இயக்குநர் மரு. மா. ஆர்த்தி, திராவிடக் களஞ்சியத்தின் பொது பதிப்பாசிரியர் மூ.அப்பணசாமி ஆகியோர் கலந்துகொண்டனர்.

நாடு முன்னேற்றமடைய அனைத்து மாநிலங்களும் சுயாட்சி பெற்றவையாக இருக்க வேண்டியது அவசியம்!

மலரட்டும் மாநில சுயாட்சி! முதல்வரின் கரத்துக்கு வலு சேர்ப்போம்; வெல்வோம் ஒன்றாக!

'தினகரன்' நாளேடு தலையங்கத்தில் வலியுறுத்தல்!

சென்னை, பிப். 20 –

நாடு முன்னேற்றமடைய, பெருமையடைய அனைத்து மாநிலங்களும் சுயாட்சி பெற்றவையாக இருக்க வேண்டியது அவசியமெனவும், மலரட்டும் மாநில சுயாட்சி, முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் கரத்துக்கு வலு சேர்ப்போம்; வெல்வோம் ஒன்றாக எனவும் 'தினகரன்' நாளேடு தலையங்கத்தில் வலியுறுத்தியுள்ளது.

அது வருமாறு:-

நாடு சுதந்திரம் அடைந்த நாளில் இருந்து, மாநில சுயாட்சி கொள்கை தொடர்ந்து வலியுறுத்தப்பட்டு வருகிறது. குறிப்பாக, தமிழ்நாட்டில் இருந்துதான் இந்த குரல் மேலோங்கி எழுகிறது. மாநிலங்களின் உரிமைகள் குறித்து 1963ம் ஆண்டிலேயே அறிஞர்

தினகரன்
பிப்ரவரி 19, 2026 வியாழக்கிழமை
மலரட்டும் மாநில சுயாட்சி
நாடு சுதந்திரம் அடைந்த நாளில் இருந்து, மாநில சுயாட்சி கொள்கை தொடர்ந்து வலியுறுத்தப்பட்டு வருகிறது. குறிப்பாக, தமிழ் நாட்டில் இருந்துதான் இந்த குரல் மேலோங்கி எழுகிறது. மாநிலங்களின் உரிமைகள் குறித்து 1963ம் ஆண்டிலேயே அறிஞர் அண்ணா நாடாளுமன்றத்தில் முழங்கினார். 1967ம் ஆண்டு திமுக தேர்தல் அறிக்கையிலும் இது வலியுறுத்தப்பட்டது. அண்ணா மறைவுக்கு பிறகு கலைஞர், 'மாநிலத்தில் சுயாட்சி, மத்தியில் கூட்டாட்சி' என்பதை ஜம்பெரும் முழக்கங்களில் ஒன்றாக வடித்துக்கொடுத்தார்.
ஒன்றிய-மாநில அரசுகளின் உறவுகளை மேம்படுத்த 1969ம் ஆண்டு கலைஞர் முதல்வராக

அண்ணா நாடாளுமன்றத்தில் முழங்கினார். 1967ம் ஆண்டு தி.மு.க. தேர்தல் அறிக்கையிலும் இது வலியுறுத்தப்பட்டது.

அண்ணா மறைவுக்கு பிறகு கலைஞர், 'மாநிலத்தில் சுயாட்சி, மத்தியில் கூட்டாட்சி' என்பதை ஜம்பெரும் முழக்கங்களில் ஒன்றாக வடித்துக் கொடுத்தார்.

ஒன்றிய - மாநில அரசுகளின் உறவுகளை மேம்படுத்த 1969ம் ஆண்டு கலைஞர் முதல்வராக இருந்தபோது, ஓய்வு பெற்ற நீதிபதிகள் பி.வி.ராஜமன்னார், டாக்டர் லட்சுமண சாமி முதலியார், பி. சந்திரரெட்டி ஆகியோர் கொண்ட உயர்மட்ட குழுவை அமைத்தார். இந்த குழு விரிவாக ஆய்வுசெய்து 1971ம் ஆண்டு தனது அறிக்கையை சமர்ப்பித்தது. இந்த குழு அளித்த முக்கிய பரிந்துரைகளை தமிழக சட்டமன்றத்தில் தீர்மானமாகவும் நிறைவேற்றினார் கலைஞர்.

இதனைத்தொடர்ந்து, ஒன்றிய - மாநில அரசுகளுக்கு இடையான உறவுகளை மேம்படுத்த, ஒன்றிய அரசு சார்பில் 1983ம் ஆண்டு நீதிபதி சர்க்காரியா தலைமையிலான ஆணையம், 2000ம் ஆண்டு வெங்கடாசலையா ஆணையம் 2007ம் ஆண்டு நீதிபதி பூஞ்சி தலைமையிலான குழு அமைக்கப்பட்டது. இந்த குழுக்கள் சார்பில் ஆயிரக்கணக்கான பக்கங்கள் கொண்ட அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டும், இதுவரை எந்த முன்னேற்றமும் இல்லாமல், ஏமாற்றம் தொடர்கிறது.

எனவே, எல்லா அதிகாரமும் கொண்டவைகளாக மாநில அரசுகளை மாற்றும் வகையில் அரசியலமைப்பு சட்டத்தில் திருத்தம் கொண்டு வர முயற்சிக்கும் சட்ட முன்னெடுப்புகளை தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மேற்கொண்டுள்ளார்.

மாநிலங்களின் நியாயமான உரிமைகளை பாதுகாக்கவும், ஒன்றிய - மாநில அரசுகளுக்கு இடையேயான உறவுகளை மேம்படுத்தவும் உச்சநீதிமன்ற முன்னாள் நீதிபதி குரியன் ஜோசப் தலைமையில் கே.அசோக் வர்தன் ஷெட்டி மற்றும் மு.நாகநாதன் ஆகியோரை உறுப்பினர்களாக கொண்டு அமைக்கப்பட்ட உயர்மட்ட குழு தனது அறிக்கையை, முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களிடம் கடந்த இரு தினங்களுக்கு முன்பு சமர்ப்பித்தது. அரசியலுக்கு அப்பாற்பட்ட முயற்சியாக அமைக்கப்பட்ட இந்த குழு, தற்போது கூட்டாட்சி முறை எதிர்கொள்ளும் சவால்களை தனது ஆய்வறிக்கையில் விரிவாக குறிப்பிட்டுள்ளது.

அனைத்து அதிகாரங்களையும் தன்வசம் வைத்துள்ள ஒன்றிய அரசு, அவற்றை எதேச்சதிகார மனப்பான்மையோடு பயன்படுத்துவதோடு, மாநில அரசுகளையும் மதிப்பதில்லை. எல்லாவற்றுக்கும் மாநில அரசுகள், ஒன்றிய அரசின் தயவை எதிர்பார்த்து காத்துக்கிடக்க வேண்டியுள்ளது. மாநில அரசின் பட்டியலில் உள்ள முக்கிய ஆதாரங்களைக்கூட ஒத்திசைவு பட்டியலுக்கு மடைமாற்றம் செய்யும் பணிகள் இன்றைய ஒன்றிய அரசு மேற்கொண்டு வருகிறது. மாநிலங்களின் உரிமைகள் ஒவ்வொன்றாக பறிக்கப்பட்டு மாநில மக்களின் அடிப்படை உரிமைகளையே ஒன்றிய அரசிடம் போராடி பெறவேண்டிய இக்கட்டான நிலை உருவாகியுள்ளது.

இந்த பிரச்சினைகளுக்கு தீர்வு காண அனைத்து மாநிலங்களும் சுயாட்சி பெற்றவையாக இருக்க வேண்டும். மாநிலங்கள் வலுவாக இருந்தால்தான் ஒன்றிய அரசால் வலுவாக இருக்க முடியும். மாநிலங்கள் வளர்ந்தால்தான், ஒட்டுமொத்த நாடும் வளரும். பெருமை அடையும். மலரட்டும் மாநில சுயாட்சி. முதல்வரின் கரத்துக்கு வலு சேர்ப்போம். வெல்வோம் ஒன்றாக...!

இவ்வாறு அத்தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

வரும்...!

எங்கள்

மார்ச் (1) ஒன்னின்

மதிநுட்ப
அரசியலே

எடப்பாடி அரசியல்
முடிவுக்கு வரும்...

எகத்தாள
அரசியல்
தெளிவுக்கு
வரும்..

பா.ஜ.க. அரசியல்
தலைக்
குனிவுக்கு வரும்..

மறுமுறை
மகுடத்துக்கு
வரும்...

**– என்ன
நாஞ்சொல்றது**

மருது அழகுராஜ்
கழக செய்தித் தொடர்புக்
குழுத் துணைத் தலைவர்

திருநெல்வேலி மேற்கு மாவட்டம்

அம்பாசமுத்திரம் கிழக்கு, அம்பாசமுத்திரம் மேற்கு ஆகிய ஒன்றியக் கழகப் பொறுப்புக்குழு உறுப்பினர்கள் நியமனம்

தலைமைக் கழக அறிவிப்பு!

கழக நிர்வாக வசதிக்காகவும் கழகப் பணிகள் செம்மையுற நடைபெற்றிடவும் 16.12.2025 அன்று திருநெல்வேலி மேற்கு மாவட்டம், அம்பாசமுத்திரம் கிழக்கு, அம்பாசமுத்திரம் மேற்கு ஆகிய ஒன்றியங்கள் பிரிக்கப்பட்டு, ஒன்றியக் கழகப் பொறுப்பாளர்கள் நியமிக்கப்பட்டனர். மேற்சொன்ன ஒன்றியங்களில் கழகப் பணிகள் செவ்வனே நடைபெற, அந்தந்த ஒன்றியங்களுக்கான பொறுப்புக்குழு உறுப்பினர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

அம்பாசமுத்திரம் கிழக்கு ஒன்றியம்

பொறுப்புக்குழு உறுப்பினர்கள் : 1. ப.முத்துபாண்டி, தெற்கு தெரு, அயன்திருவாலீஸ்வரம், 2. ஈ.பொன்னுசாமி, வெயிலான் தெரு, பிரம்மதேசம். 3. மு. பூதத்தான், சுப்பிரமணியசுவாமி கோவில் தெரு, மன்னார்கோவில், 4. ச.பாபநாசம், வடக்கு தெரு, வைராவிகுளம், 5. சே. மீரான்பண்ணையார், மெயின் ரோடு, வெள்ளாங்குளி. 6. அ. அசோக், நாராயணசுவாமி கோவில் தெரு, வாகைகுளம். 7. சு. வேம்பு, தெற்கு பாப்பான்குளம், வாகைகுளம். 8.திருமதி ஆர்.சுந்தரி, பிள்ளையார் கோவில் தெரு, பிரம்மதேசம்.

அம்பாசமுத்திரம் மேற்கு ஒன்றியம்

பொறுப்புக்குழு உறுப்பினர்கள் : 1. மா.ராமையா, பிள்ளையார்கோவில் தெரு, கோடாரங்குளம். 2. த.செல்வம், பெருமாள் கோவில் தெரு, சிவந்திபுரம். 3. ச. ஆறுமுகநயினார் (எ) ரவி, கல்சுண்டு காலனி, அடையக்கருங்குளம். 4. சு.க.நெடுஞ்செழியன், பெரிய தெரு, அம்பலவாணபுரம். 5. சே. நாராயணன், அய்யா கோவில் தெரு, சிவந்திபுரம் கஸ்பா. 6. நா.ரதிமாலா, மெயின் ரோடு, அடையகருங்குளம். 7. கா.அருந்தபசு, சங்கரன்கோவில் தெரு, சிவந்திபுரம் கஸ்பா. 8. இ. செல்வராஜ், பிள்ளையார் கோவில் தெரு, கோடாரங்குளம்.

அண்ணா அறிவாலயம்
சென்னை - 18
நாள்: 19.2.2026

துரைமுருகன்
பொதுச் செயலாளர்
தி.மு.க.

சட்டமன்றத் தேர்தலில் தி.மு.க. கூட்டணிக்கு ஆதரவு !

சமத்துவ மக்கள் கழக கூட்டத்தில் முடிவு! எர்ணாவூர் நாராயணன் அறிவிப்பு!

சென்னை,பிப்.20–

சமத்துவ மக்கள் கழக நிறுவனத் தலைவரும், தமிழ்நாடு பனைமரத் தொழிலாளர்கள் நல வாரிய தலைவருமான எர்ணாவூர் நாராயணன் தலைமையில் அக்கட்சியின் மாவட்ட செயலாளர்கள் ஆலோசனை கூட்டம் சென்னை கோயம்பேட்டில் உள்ள டீலக்ஸ் நடைபெற்றது.

ஆட்சி பொறுப்பேற்ற முதல் தி.மு.க. அரசு மிகப்பெரிய சாதனைகளை செய்து வருகிறது. சட்ட ஒழுங்கு சிறப்பாக இருக்கிறது. அரசின் திட்டங்களை மக்களுக்கு சிறப்பாக கொண்டுபோய் சேர்ந்து இருகிறார்கள். பெருந்தலைவர் காமராஜர் மதிய உணவு திட்டத்தை அறிவித்தார்கள். அவர் வழியில், முதல்வர் ஸ்டாலின் காலை உணவு திட்டத்தை கொண்டு வந்துள்ளார்.

கூட்டணித் தலைவர்களை மதிக்க கூடிய தலைவர் முதல்வர் ஸ்டாலின். அதனால், வருகிற சட்டமன்ற தேர்தலில் தி.மு.க.வுக்கு ஆதரவு அளித்து இருக்கிறோம்.

234 தொகுதியிலும் பணியாற்ற தயாராக இருக்கிறோம் என்று தெரிவித்து இருக்கிறேன். மாநில, மாவட்ட அளவில் தேர்தல் பணியை சிறப்பாக

மேற்கொள்ள வேண்டும். தூத்துக்குடியில், மகளிர் மாநாடு நடத்தவும் திட்டமிட்டுள்ளோம்.

கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் விபரம் வருமாறு : –

தமிழ்நாடு பனைமரத் தொழிலாளர்கள் நல வாரிய தலைவராக எர்ணாவூர் நாராயணன் பொறுப்பேற்ற பிறகு பனைத் தொழிலாளர்கள் வாழ்வாதாரம் மேம்படவும்,

ஒரு கோடி பனை விதைகள் நட்டு உலக சாதனை புரிந்து மேலும் தொடர்ச்சியாக பனை விதைகளை நடவு செய்து கொண்டிருக்கின்ற அவரது சிறப்பான பணிக்கு கூட்டத்தின் வாயிலாக பாராட்டு தெரிவித்து நிறைவேற்றப்படுகிறது.

ஆரம்பக் கல்வி மாணவ,மாணவியருக்கு படிக்கும் காலை உணவு திட்டம், அரசு கல்லூரி பயிலும் ஆயிரம் மாணவிகளுக்கு மாதந்தோறும் ஏழை எளிய ரூபாய் வழங்கும், புதுமைப்பெண் திட்டம், குடும்பத் தலைவிகளுக்கு உதவும் வகையில் மாதந்தோறும் ஆயிரம் வழங்கும் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம், வீடு தேடி மருத்துவ திட்டம்,

உங்களைத் தேடி திட்டம், நான் முதல்வன் திட்டம், கட்டணமில்லா பேருந்து சேவையான விடியல் பயணம் திட்டம் என எண்ணற்ற திட்டங்களை தமிழ்நாட்டு மக்களுக்கு அளித்த தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு பாராட்டுகளையும், நன்றிகளையும் இக்கூட்டத்தின் வாயிலாக தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றப்படுகிறது.

எல்லை தாண்டி மீன்பிடிப்பதாக கூறி தமிழ்நாடு தொடர்ச்சியாக நடவடிக்கைகளில் ஈடுபட்டு வரும் மீனவர்களை கைது இலங்கை அரசிடமிருந்து மீனவர்களையும் அவரது படகுகளையும் விடுவிக்க ஒன்றிய அரசு நிரந்தர தீர்வு காண வேண்டும்.

தென் தமிழ்நாட்டின் துறைமுக மாவட்டமான தூத்துக்குடி மற்றும் திருச்செந்தூரில் இருந்து சென்னை வருவதற்கு ஒரு ரயில் மட்டுமே இயக்கப்படுகிறது. கூடுதலாக ரயில்கள் இயக்கிட தமிழ்நாடு அரசு ஒன்றிய அரசை வலியுறுத்த வேண்டும்.

தற்போது ஒன்றிய அரசு அறிவித்த பட்ஜெட்டில் மீண்டும் தமிழ்நாட்டைப் புறக்கணித்து எந்தவித புதிய திட்டங்களும் வியாபார பெருங்குடி மக்களுக்கு எந்தவொரு திட்டங்கள் அறிவிக்காமல் வெற்று பட்ஜெட்டாக தமிழ் நாட்டிற்கு நிதியைகூட ஒதுக்கீடு செய்யாமல் தமிழ்நாட்டை வஞ்சிக்கின்ற ஒன்றிய அரசை கண்டித்து தீர்மானம் நிறைவேற்றப்படுகிறது.

வருகின்ற 2026 சட்டமன்றத் பொதுதேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் அதன் கூட்டணி கட்சிகளுக்கும் சமத்துவ மக்கள் கழகம் தனது முழு ஆதரவு அளிப்பதுடன் 234 தொகுதியிலும் தேர்தல் பணியாற்றி அதன் வெற்றிக்கு பாடுபடும் என்பதனை இக்கூட்டத்தின் வாயிலாக தீர்மானிக்கப்படுகிறது.

நடைபெற இருக்கின்ற சட்டமன்றத் 2026 பொதுதேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகத் தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியில் திராவிட முன்னேற்றக் கழகம் சமத்துவ மக்கள் கழகத்திற்கு ஒதுக்குகின்ற தொகுதிகளில் போட்டியிடுவது என தீர்மானிக்கப்படுகிறது.

பனை மர தொழிலாளர்கள் பனை மரம் ஏறுவதற்கு தமிழ்நாடு பனை மர தொழிலாளர்கள் நல வாரியத்தில் வழங்கப்பட்ட அடையாள அட்டை இருந்தால் போதுமானது என அரசு ஆணை பிறப்பிக்க தமிழ்நாடு அரசை கேட்டுக் கொள்வதென கூட்டத்தின் வாயிலாக தீர்மானிக்கப்படுகிறது.

சாதி, மத, சமய வேறுபாடுகளை கலைந்து வாடிய பயிரை கண்டபோதெல்லாம் வாடினேன் என அன்பின் வழியில் பசித்தவர்களுக்கு எல்லாம் உணவு அளித்த ராமலிங்க அடிகளார் என்ற வள்ளலாரின் பெயரில் திருவொற்றியூர் நெடுஞ்சாலையை வள்ளலார் நெடுஞ்சாலையாக மாற்றம் செய்த தமிழ்நாடு முதலமைச்சர் ஸ்டாலினுக்கு கூட்டத்தில் வாயிலாக நன்றியையும், பாராட்டுக்களையும் தெரிவித்து கொள்கிறோம் உள்ளிட்ட 9 தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.